DEPOSITION OF WITNESS
(Chapter XX Code of Criminal Procedure)
IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT JUDGE, SALEM.

**அமர்வு வழக்கு எண்.326/2018**

Deposition of :PW -2

| | |
|---|---|
| Name : பரமேஸ்வரன் | Caste: |
| Father's / Husband Name: | Calling: |
| Village : | Religion: |
| Taluk : | Age: |
| Date : | |

Solemnly affirmed in accordance with the provisions of Law and recording the Deposition of the Witness on 20th day of March 2025.

Accused present.

**முதல் விசாரணை :-**

நான் தென்அழகாபுரம் காலனியில் குடியிருந்து வருகிறேன். நான் தனியார் நிறுவனத்தில் மேலாளராக பணிபுரிகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். அவர் என் வீட்டிற்கு எதிர் புறம் உள்ளார். அ.சா.1 எனது அண்ணன் செல்வகுமாரின் மனைவி. கடந்த 23.12.2017 அன்று மாலை எதிரியும், அவரது மனைவி கலையரசியும் அவர் வீட்டில் சண்டைபோட்டுகொண்டிருந்தார்கள். அதை விலக்குவதற்காக என் அண்ணன் செல்வகுமார் சென்றுள்ளார். எதிரி அவரது மனைவியை அடிப்பதற்கு பதிலாக என் அண்ணனை நீ யார் வந்து விலக்குவதற்கு என்று சொல்லி தேவிடியா பையலே என்று சொல்லி கட்டையால் உச்சிமண்டையில் அடித்துள்ளார். முதலில் அடித்தபோதே நிதிஷ்குமார் ஓடியுள்ளார். அதற்குள் எதிரி 2, 3 முறை அடித்துவிட்டார்.

என் வீட்டிற்கும், சம்பவம் நடந்த இடத்திற்கும் 150 அடி தான் இருக்கும். நாங்கள் வருவதை பார்த்தவுடன் எதிரி கட்டையுடன் அவருடைய பகுதிக்கு சென்றுவிட்டார். ஒருவர் மட்டும் எதிரியை துரத்தி சென்றார். நாங்கள் செல்வகுமாரை ஆட்டோவில் ஏற்றி எஸ்கேஎஸ் மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். அங்கு சிகிச்சை

பெற்றுகொண்டு வீட்டிற்கு வந்தோம். மறுபடியும் செல்வகுமார் வலி இருப்பதாக சொன்னதால் ஐஸ்வர்யம் மருத்துவமனைக்கு அவரை அழைத்து சென்றோம். அவர்கள் கட்டையால் அடித்ததை தெரிந்து கொண்டு காயம் அதிகாமாக இருக்கிறது உடனே அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சேருங்கள் எனறு சொன்னார்கள். 25.12.2017 அன்று அதிகாலை செல்வகுமாரை அரசு மருத்துவமனைக்குஅழைத்து சென்று நடந்ததை சொல்லி சிகிச்சைக்கு சேர்த்தேன். போலிசாருக்கு தகவல் சொல்வதாக மருத்துவர் சொன்னார்.

மாலை வரை செல்வகுமார் அரசு மருத்துவமனையில் இருந்தார். நான் வீட்டிற்கு வந்துவிட்டேன். செல்வகுமாரும் இரவு வீட்டிற்கு வந்துவிட்டார்.போலிசார் செல்வகுமாரை தேடிகொண்டு வந்தார்கள். நான் அழைத்து வருவதாக சொன்னேன். மறுபடியும் 2 நாட்கள் கழித்து வலி அதிகமானதால் அரசு மருத்துவமனைக்கு செல்வகுமாரை அழைத்து சென்றேன். அங்கு வைத்து நடந்ததை சொன்னேன். எதிரி தான் செல்வகுமாரை அடித்ததாக சொன்னேன். அதன் பின்பு செல்வகுமாரை அவசரச சிகிச்சை பிரிவில் சேர்ந்தது சிகிச்சை அளித்துகொண்டிருந்தார்கள். செல்வகுமாருக்கு அறுவை சிகிச்சை செய்யவேண்டும் என்று சொன்னார்கள் நான் சரி என்று சொன்னேன்.

31.12.2017 அன்று காலை சுமார் 10, 10.30 மணிக்குசெல்வகுமார் இறந்துவிட்டதாக அ.சா.1 எனக்கு போன் செய்தார். அதன் பின்பு நான் அரசு மருத்தவமனைக்கு சென்றேன். போலிசார் 12 மணிக்கு வந்தார். வந்தவர்கள் பிரேதபரிசோதனைக்காக செல்வகுமாரை எடுத்து சென்றார்கள். போலிசார் மற்றும் மருத்துவர் மருத்துவமனையில் வைத்து பிரேதத்தையும், அதன் மீதுள்ள காயத்தையும் எனக்கு காண்பித்தார்கள். அப்போது என்னுடன் அ.சா.1 , சதீஷ், அர்ச்சுணன், ரஞ்சித் ஆகியோர் இருந்தார்கள். போலிசர் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

தற்போது நீதிமன்றத்தில் சொன்னதை தான் போலிசாரிடம் சொன்னேன். நான் சொன்னதை போலிசார் எழுதி கையெழுத்து வாங்கினார்களா என்றால் என்னிடம்

கையெழுத்து வாங்கவில்லை. அ.சா.1 னிடம் தான் கையெழுத்து வாங்கினார்கள் போலிசார் எழுதியதில் நிறைய தவறு இருக்கிறது. சம்பவ சமயத்தில் நான் வீட்டில் தான் இருந்தேன். செல்வகுமாரின் வீட்டிற்கும், காவல்நிலையத்திற்கும் சுமார் ½ கி.மீ தூரம் இருக்கும். சம்பவ நடந்த இடத்திலிருந்து எஸ்கே.எஸ் மருத்துவமனைக்கு செல்லவேண்டும் என்றால் அழகாபுரம் காவல்நிலையம் வழியாக செல்லவேண்டும் என்றால் சரியல்ல. எதிரி மனநலம் பாதிக்கப்பட்டவர் என்று எங்களுக்கு தெரியும் என்று சொன்னால் அவர் எப்போதும் கத்திகொண்டு இருப்பார் அதனால் அப்படி சொல்வார்கள்.

எஸ்கே.எஸ் மருத்துவமனை மற்றும் ஐஸ்வர்யம் மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற விவரம் அ.சா.1 சொல்லி தான் எனக்கு தெரியும் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி விவரத்தை காவல்துறையினரிடம் நான் சொல்லவில்லை. சம்பவம் நடந்தவுடன் சம்பவ இடத்திற்கு போலிசார் வந்து விசாரித்து கோபி, மணிகண்டன், ஹரிகரன், நிதிஷ்குமார், அர்ச்சுணன் ஆகியேர்களை விசாரித்து கையெழுத்து வாங்கினார்கள் என்றால் சரிதான். வந்த போலிசர் விசாரித்துவிட்டு அங்கிருந்த கட்டையை எடுத்து சென்றுவிட்டார்கள் என்றால் அதை நான் பார்க்கவில்லை. சம்பவத்தை பற்றி எனக்கு நேரடியாக தெரியாதும் என்றும் அ.சா.1 சொல்லி தான் எனக்கு தெரியும் என்று சொன்னால் சரியல்ல.

இறந்துபோன செல்வகுமார் என் அண்ணன் என்பதால் நான் நடக்காத சம்பவத்தை பார்த்ததுபோல் பொய் சொல்லுகிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Sd/– L. Kalaivani,
III Additional District Judge,
Salem.